# 8

# அத்தஹாரத் - 2

## வுழூ

சுத்தம் செய்வதற்கு குளித்தல், வுழூச் செய்தல் போன்ற நடைமுறைகளை இஸ்லாம் அறிமுகம் செய்துள்ளது. தொழுதல், தவாப் செய்தல் போன்ற இபாதத்துகளை நிறைவேற்றுவதற்கு வுழூ இன்றியமையாததாகின்றது. வுழூச் செய்வதால் உறுப்புக்கள் கழுவப் படுகின்றன. வுழூ செய்யும்போது நனைந்த உறுப்புக்கள் மறுமைநாளில் பிரகாசமளிக்கும் என ஹதீஸ்கள் கூறுகின்றன. இப்பிரகாசம் கொண்டோர் மறுமையில் 'குர்ரன் முஹஜ்ஜலீன்' என அடையாளப்படுத்தப்படுவர். எனவே அழகாகவும், நேர்த்தியாகவும் வுழூச் செய்து நன்மைகளை அதிகரித்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வுழூவை நேர்த்தியாகச் செய்து கொள்வதற்கு பர்ளு, சுன்னத்துகள், என்பவற்றைப் பேணி வுழூச் செய்வது அவசியமாகும்.

## வுழூவின் பர்ளுகள்

1. வுழூச்செய்ய ஆரம்பிக்கும்போது 'வுழூவை நிறைவேற்றுகின்றேன்' என எண்ணம் (நிய்யத்) கொள்ளல்.
2. முகத்தை முழுமையாகக் கழுவுதல். (உயரத்தால் முன் நெற்றி முதல் நாடிக்குழி வரையும் அகலத்தால் இரு காதுகளுக்கிடையிலும் முழுமையாகக் கழுவப்படல் வேண்டும்).
3. இரண்டு கைகளையும் முழங்கை உட்படக் கழுவுதல்.
4. தலையை மஸ்ஹு செய்தல்.

5. இரு கால்களையும் கரண்டைக்கால் உட்படக் கழுவுதல்.

6. மேலே கூறப்பட்ட ஒழுங்கைப் பேணிச் செய்தல்.

வுழுவை நிறைவேற்றுகின்ற போது பர்ளுகளுடன் ஸுன்னத்துக்களையும் பேணிக்கொள்ள வேண்டும்.









## வுழூவின் ஸுன்னத்துக்கள்

1. வுழூச்செய்யும்போது கிப்லாவை முன்னோக்குதல்.
2. வுழூச்செய்ய ஆரம்பிக்கும் போது பிஸ்மி கூறுதல்.
3. இரு முன்னங் கைகளையும் மணிக்கட்டு வரைக் கழுவுதல்.
4. பற்களைத் துலக்குதல். (மிஸ்வாக் செய்தல்)
5. வாய் கொப்பளித்தலும் நாசிக்கு நீர் செலுத்துதலும்.

6. வலது பக்க உறுப்புக்களை முற்படுத்தல்.

7. தலை முழுவதையும் மஸ்ஹு செய்தல்.

8. இரு காதுகளையும் மஸ்ஹு செய்தல்.

9. ஒவ்வொன்றையும் மும்மூன்று முறை செய்தல்.

10. வுழூவின் துஆவை ஓதுதல்.

### வுழூவின் துஆ

கீழுள்ளவாறு இரண்டாம் கலிமா ஓதிய பின்னர் தொடர்ந்து கீழுள்ள துஆவை ஓதுதல்,

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّداً
عَبْدُهُ وَرَسُولُهُ اَللَّهُمَّ اجْعَلْنِي مِنَ التَّوَّابِينَ وَاجْعَلْنِي مِنَ
الْمُتَطَهِّرِينَ وَاجْعَلْنِي مِنْ عِبَادِكَ الصَّالِحِينَ

'இறைவா! என்னைப் பாவமீட்சி தேடுபவர்களுள் ஒருவராகவும் தூய்மையானவர்களுள் ஒருவராகவும் நல்லடியார்களுள் ஒருவராகவும் ஆக்குவாயாக'.

வுழூவை முறிக்கும் காரியங்கள் முப்திலாத் எனப்படுகின்றன. அவற்றில் ஏதாவது ஒன்று இடம்பெற்றுவிட்டால் வுழூ முறிந்து விடும்.

### வுழூவை முறிக்கும் காரியங்கள் (முப்திலாத்)

1. முன் பின் துவாரங்களிலிருந்து ஏதாவது வெளிவருதல்.

2. புத்தி நீங்குதல். (மயக்கம், தூக்கம், போதை என்பவற்றால்)

3. அஜ்னபியான ஆண்கள் பெண்களையோ பெண்கள் ஆண்களையோ திரையின்றி இச்சையுடன் தொடுதல்

4. எவ்விதத் திரையுமின்றி அபத்தைத் தொடுதல்.

மேலே கூறப்பட்ட வுழூவின் பர்ளுகள், சுன்னத்துக்கள் என்பவற்றைப்

பேணி முப்திலாத்களிலிருந்து தவிர்ந்து வுழூவை முறையாகப் பேணுவோம்.

**பயிற்சி**

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. வுழூவின் பர்ளுகள் (ஆறு / மூன்று / நான்கு) ஆகும்.
2. இரு காதுகளையும் மஸ்ஹு செய்தல் வுழூவின் (பர்ளு / ஸுன்னத் / முப்திலாத்) ஆகும்.
3. இரு கால்களையும் கரண்டை உட்படக் கழுவுதல், வுழூவின் (பர்ளு / ஸுன்னத் / முப்திலாத்) களில் ஒன்றாகும்.
4. வுழூவை முறிக்கும் காரியங்களில் ( பற்களைத் துலக்குதல் / மயக்கம் ஏற்படல் / முகத்தைக் கழுவுதல்) ஒன்றாகும்.
5. வுழூச்செய்யும் போது ஒவ்வொரு உறுப்பையும் ( ஒவ்வொரு / இவ்விரண்டு / மும்மூன்று) முறை கழுவுவது ஸுன்னத்தாகும்.

**செயற்பாடு**

வுழூச் செய்ததும் ஓத வேண்டிய துஆவை அறபியில் எழுதுக. அதனை மனனமிட்டு ஒப்புவிக்குக.